

நேற்று முன்தினம் (03.01.2025) தலைமைச் செயலகத்தில் நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் சிறந்த முறையில் பராமரிக்கப்பட்ட 6 அணைகளுக்கான "சிறந்த அணை பராமரிப்பு" விருதுகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் நீர்வளத்துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர். க.மணிவாசன், நீர்வளத்துறையின் முதன்மைத் தலைமைப் பொறியாளர் மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) சா.மன்மதன், திருச்சி மண்டலத் தலைமைப் பொறியாளர் தயாளகுமார் ஆகியோர் உள்ளனர்.



ஈரோடு மாநகராட்சி வார்டு எண் 24, ஆர்.கே.வி. நகரில் பூங்காவினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி திறந்து வைத்து பார்வையிட்டார். நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜகோபால் சுன்கரா, மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம், மாநகராட்சி ஆணையாளர் மனிஷ், துணை மேயர் வி.செல்வராஜ், மண்டல தலைவர் ப.க.பழனிசாமி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### திருவல்லிக்கேணி, பார்த்தசாரதி திருக்கோயில்

# வைகுண்ட ஏகாதசி முன்னேற்பாடு பணிகள்!

## இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆய்வு!

சென்னை, ஜன.5-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படி, இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு நேற்று முன்தினம் (03.01.2025) சென்னை, திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி திருக்கோயி லில் வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு, மேற்கொள்ளப்பட வேண்டிய முன்னேற் பாடு பணிகள் குறித்து இந்து சமய அறநிலையத்துறை, காவல்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி, வருவாய் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை, மின்சார வாரியம், சென்னை குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீரகற்று வாரியம், தீயணைப்புத்துறை, போக்குவரத்துத்துறை உள்ளிட்ட துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். பின்னர், திருக்கோயில் சார்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை பார்வையிட்டார்.

பின்னர், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது :-

108 திவ்யதேசங்களில் 84-வது திவ்ய தேசமாக போற்றப்படுகின்ற திருவல்லிக்கேணி, அருள்மிகு பார்த்தசாரதி சுவாமி திருக்கோயிலில் இந்த ஆண்டு வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு வருகின்ற ஜனவரி 10 மற்றும் 11 ஆகிய இரண்டு நாட்களில் இரண்டு லட்சத்திற்கும் அதிகமான பக்தர்கள் வருகை புரிவார்கள் என எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டு போலவே இந்த ஆண்டும் சிறப்பு தரிசனக் கட்டணம் ரத்து செய்யப்படுகிறது. எல்லோருக்கும் எல்லாம் என்ற வகையில் அனைத்து பக்தர்களுக்கும் பொதுவான சாமி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது. காவல்துறை சார்பில் 3 துணை ஆணையர்கள் தலைமையில் உதவி ஆணையர்கள், காவல் துறை ஆய்வாளர்கள் என ஒரு முறைக்கு 600 காவலர்கள் வீதம் 3 முறைகளில் பாதுகாப்பு பணிகளை மேற்கொள்ள உள்ளனர். திருக்கோயிலின் சுற்றுப்புறங்களில் 32 கண்காணிப்பு கேமராக்கள் கூடுதலாக பொருத்தப்பட உள்ளன.

திருக்கோயிலில் 5 இடங்களில் மருத்துவ முகாம்கள் அமைக்கப்படுவதோடு, நாள் முழுவதும் 2 ஆம்புலன்ஸ் வாகனங்கள் தயார் நிலையில் வைக்கப்படும். பக்தர்கள் இலகுவாக தரிசனம் மேற்கொள்ளும் வகையில் வரிசை அமைப்பானது (கியூ) நீடிக்கப்படுவதோடு, 20 அடிக்கு ஓரிடத்தில் காவலர் ஒருவரை நியமனம் செய்து அனைத்து பக்தர்களுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் பாட்டில்கள் வழங்கப்படும். திருக்கோயிலின் திருக்குளம் அருகிலும் மற்றும் நரசிம்மர் சன்னதி பின்புறமும் 20 தற்காலிக கழிப்பிடங்கள் அமைக்கப்படுகிறது. மூத்தக் குடிமக்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் கர்ப்பிணி பெண்கள் வைகுண்ட ஏகாதசி அன்று காலை 8 மணி முதல் 10 மணி வரையிலும், மதியம் 2 மணி முதல் 4 மணி வரையிலும் திருக்கோயிலின் பின்கோபுர வாசல் வழியாக சுவாமி தரிசனம் செய்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதோடு, அவர்களுக்காக 8 மின்கல வண்டிகள் தயார் நிலையில் வைக்கப்படும்.

இந்து சமய அறநிலையத் துறை சார்பில் இணை ஆணையர்கள், உதவி ஆணையர்கள் மற்றும் முதல் நிலை செயல் அலுவலர்கள் சிறப்புப்பணி அலுவலர்களாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் குப்பைகளை உடனுக்குடன் அகற்றிட 100 தூய்மைப் பணியாளர்கள் சுழற்சி முறையில் பணியாற்றுவர்.

வைகுண்ட ஏகாதசியை முன்னிட்டு பரமபதவாசல் காலை 4.30 மணிக்கு திறக்கப்படும். அதற்கான தரிசனக் கட்டண சீட்டு ரூ.500/- க்கு ஆன்லைன் மூலம் வருகின்ற ஜனவரி 6 ஆம் தேதி பெற்றுக் கொள்ளலாம். இதன்மூலம் 1,500 கட்டணச் சீட்டுகள் வழங்கப்படும். மேலும், 500 நபர்கள் முதலில் வருவோருக்கு முன்னுரிமை அடிப்படையில் பரமபதவாசல் தரிசனம் செய்ய கட்டணமின்றி அனுமதிக்கப்படுவர். பக்தர்களின் வாகனங்களை நிறுத்துவதற்கு என்.கே.டி.பள்ளி மற்றும் இராணி மேரி கல்லூரியின் வாகன நிறுத்தங்கள் அமைக்கப்படுகிறது. திருக்கோயில் அருகில் 2 தீயணைப்பு வாகனங்கள் நிறுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டள்ளது. கடந்த ஆண்டுகளில் பெற்ற அனுபவங்களின் அடிப்படையில் சிறு குறைகளையும் நிவர்த்தி செய்து, எவ்வித சிறு அசம்பாவிதமும் இன்றி பக்தர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் சிறப்பாக அமைந்திட அனைத்து ஏற்பாடுகளும் ஒருங்கிணைந்து மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் இரா.சுகுமார், மயிலாப்பூர் காவல்துறை துணை ஆணையர் டி.ஹரி கிரண், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் திருமதி கி.ரேணுகாதேவி, துணை ஆணையர் திருமதி சி.நித்யா, காவல் உதவி ஆணையர் என்.இளங்கோவன் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### மாவட்டச் செயலாளர் - அமைச்சர் வி.செந்தில்பாலாஜி ஏற்பாட்டில்

# கரூர் மாவட்டக் கழகம் சார்பில் மாபெரும் விளையாட்டுப் போட்டி!

## 3000 மாணவிகள் கலந்து கொண்டனர்!

கரூர், ஜன.5 -

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு கரூர் மாவட்ட கழகம் சார்பில் மாவட்டச் செயலாளர் அமைச்சர் வி.செந்தில் பாலாஜி ஏற்பாட்டின் பேரில் 3000 மாணவிகள் கலந்து கொண்ட பிரம்மாண்ட விளையாட்டுப் போட்டி கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் தொடங்கியது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் நல்லாசியுடன், கழக இளைஞர் அணி செயலாளர், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் 48 வது பிறந்த நாளை முன்னிட்டு கரூர் மாவட்ட அளவில் பள்ளி கல்லூரி மாணவ மாணவியர்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் பிரம்மாண்ட அளவில் கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் தொடங்கியது. தொடங்கியது. கரூர் மாவட்ட கழகம் சார்பில், மாவட்டச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத்துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி ஏற்பாட்டில் பிரம்மாண்டமாக நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் 3 ஆயிரம் மாணவிகள் பங்கேற்று விளையாடினர். கரூர் திருவள்ளுவர் விளையாட்டு மைதானத்தில் மாணவிகளுக்கான குழு போட்டிகள் நடைபெற்றன. இன்று (ஞாயிறு) மாணவர்களுக்கான குழுப் போட்டிகள் நடைபெறுகிறது.

இதே போன்று தடகளப் போட்டிகளும் நடைபெறுகின்றன. 11ம் தேதி( சனிக்கிழமை) மாணவிகளுக்கான தடகள போட்டிகளும் 12ஆம் தேதி (ஞாயிற்றுக்கிழமை), மாணவர்களுக்கான தடகள போட்டிகளும் திருவள்ளூர் விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது. மாணவிகள் மாணவர்களுக்கு தனித்தனியாக 14 வயதுக்குட்பட்டவர் 17 வயதுக்குட்பட்டோர் 19 வயதுக்குட்பட்டோர், கல்லூரி அளவில் குழுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

கபாடி, கோகோ, வாலிபால், எறிபந்து, கூடைப் பந்து, போட்டிகள் ஒவ்வொரு பிரிவுக்கும் நடைபெற்று தனித்தனியாக முதல் இரண்டாம் மூன்றாம் பரிசுகள் என வழங்கப்படுகின்றன.

கரூர் மாவட்டத்தில் உள்ள பள்ளி மற்றும் கல்லூரியில் பயிலும் மாணவ மாணவிகள் மட்டும் கலந்து கொள்ளலாம். கரூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பதிவு செய்ய வேண்டும். ஒரு போட்டியாளர் இரண்டு களப் போட்டியிலும் இரண்டு ஓட்ட போட்டியிலும் ஒரு குழு போட்டியில் மட்டுமே கலந்து கொள்ள முடியும். தடகளப் போட்டிக்கு ஒவ்வொரு பள்ளி மற்றும் கல்லூரியில் இருந்து ஒரு போட்டிக்கு இரண்டு நபர்கள் மட்டுமே கலந்து கொள்ள வேண்டும். பங்கேற்பவர்கள் அனைவருக்கும் பேருந்து கட்டணம் மற்றும் மதிய உணவு வழங்கப்படும். பள்ளி அளவில் பயன்படுத்தப்படும் நுழைவு படிவத்தை மாதிரியாக வைத்து பிறந்த தேதி, மாதம், வருடத்தை குறிப்பிட்டு நுழைவுப் படிவம் தயார் செய்ய வேண்டும். குழு போட்டியில் சிறந்த ஐந்து விளையாட்டு வீரர்கள் மற்றும் ஐந்து வீராங்கனை களுக்கும் அதிக புள்ளிகள் பெற்ற ரெண்டு பள்ளி மற்றும் இரண்டு கல்லூரிக்கும் என 14 பரிசு கோப்பைகள் சிறப்பு பரிசாக வழங்கப்படும் தடகளப் போட்டியில் அதிக புள்ளிகள் பெறும் பள்ளி மற்றும் கல்லூரிக்கு தலா ஒரு கோப்பை வீதம் 2 கோப்பைகள் என மாவட்ட கழகச் செயலாளரும், மின்சாரம் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சருமான வி.செந்தில் பாலாஜி வழங்குகிறார்.

விழாவில் கழக சட்டத் துறை இணைச் செயலாளர் என்.மணிராஜ், நெசவாளர் அணி செயலாளர் பரணி கே.மணி, கொள்கைப் பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி, சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் முனவர் ஜான், வர்த்தக அணி துணைச் செயலாளர் வே.பல்லவிராஜா, தொழிலாளர் அணி துணை செயலாளர் பி.விஜயக்குமார், குளித்தலை சட்டமன்ற உறுப்பினர் இரா.மாணிக்கம், அரவக்குறிச்சி சட்டமன்ற உறுப்பினர் பி.ஆர். இளங்கோ, கிருஷ்ணராயபுரம் சட்டமன்ற உறுப்பினர் க.சிவகாமசுந்தரி, கரூர் மாநகராட்சி மேயர் கவிதா கணேசன், துணை மேயர் தாரணி பி.சரவணன், மாவட்டக் கழக அவைத் தலைவர் டி. ராஜேந்திரன், துணை செயலாளர்கள், எம்.எஸ்.கே.கருணாநிதி, மகேஸ்வரி சுப்பிரமணி, பூவை ரமேஷ்பாபு, மாவட்ட கழக பொருளாளர் பி.வி.பரத், தலைமை செயற் குழு உறுப்பினர்கள் சுப.ராஜகோபால், அ.சிவராமன், காலனி செந்தில், ஜி.பாலகுருபரன், எம்.துரைராஜ், கே. சுப்பிரமணி கழக பொதுக் குழு உறுப்பினர்கள் வி.கருப்பண்ணன், என்.எஸ்.ஆறுமுகம், கே.வேலுச்சாமி, விகே. டி.ராஜ்கண்ணு, பி.பி.சரவணன், சி.கருப்பையா (எ) தர்மர், கே.சாமிநாதன், ஈ.ஜாபருல்லா, ஏ.நஞ்சுண்டேஸ்வரன், ச.சிவகாமி சண்முகம், எம்.சிவசாமி, எஸ்.காளியப்பன், என்.ராமலிங்கம், பி.சிவகாமசுந்தரி,

கலாவதி சக்திவேல், பி.ஏ.குமார், கரூர் மாநகர கழக செயலாளர் எஸ்.பி.கனகராஜ், கரூர் வடக்கு பகுதி கழக செயலாளர் கரூர் கணேசன், கரூர் தெற்கு பகுதி கழக செயலாளர் க.சுப்பிரமணியன், கரூர் மத்திய கிழக்கு பகுதி கழக செயலாளர் ஆர். எஸ்.ராஜா, கரூர் மத்திய மேற்கு பகுதி கழக பொறுப்பாளர் ஆர்.ஜோதிபாசு, கரூர் மத்திய பகுதி கழக பொறுப்பாளர் வி.ஜி.எஸ்.குமார், அரவக்குறிச்சி மேற்கு ஒன்றிய செயலாளர் எம்.எஸ்.மணியன், அரவக்குறிச்சி கிழக்கு ஒன்றிய செயலாளர் என். மணிகண்டன், க.பரமத்தி தெற்கு ஒன்றிய செயலாளர் கே.கருணாநிதி, க.பரமத்தி வடக்கு ஒன்றிய செயலாளர் த.கார்த்திக், கரூர் மேற்கு ஒன்றிய செயலாளர் சி.வளர்மதி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தாய்நாட்டின் விடுதலைக்காக வெகுண்டெழுந்த

# தியாகச் சுடர்களாம் வீரபாண்டிய கட்டபொம்மன் - வீரமங்கை வேலுநாச்சியார் புகழ் வாழ்க!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!





சென்னை, ஜன.5-

தாய்நாட்டின் விடுதலைக்காக வெகுண்டெழுந்த தியாகச் சுடர்களாம் வீரபாண்டிய கட்டபொம்மன் - வீரமங்கை வேலுநாச்சியார் புகழ் வாழ்க என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப்பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு:-

**ஆதிக்கத்துக்கு அடிபணியும் பேச்சுக்கே இடமில்லை எனத் தாய்நாட்டின் விடுதலைக்காக வெகுண்டெழுந்த தீரச்சுடர்களாம் வீரபாண்டிய கட்டபொம்மன் மற்றும் வீரமங்கை வேலுநாச்சியார் ஆகியோரின் புகழ் வாழ்க.**

இவ்வாறு முதல்வர் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### நீடாமங்கலம் ஒன்றியம் - எடமேலையூர் ஊராட்சி அலுவலகத்தில்

# 22 ஊராட்சி மன்றங்களுக்கு 35 மின்கலன் மூலம் இயங்கும் வண்டிகள் வழங்கும் விழா!

## அமைச்சர் டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது!





திருவாரூர், ஜன 5-

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூர் மேற்கு ஊராட்சி மன்ற அலுவலகத்தில், ஊரக வளர்ச்சித் துறையின் சார்பில் 22 ஊராட்சி மன்றங்களுக்கு 35 எண்ணிக்கையிலான மின்கலன் மூலம் இயங்கும் வண்டிகள் வழங்கும் விழா தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது.

திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூர் மேற்கு ஊராட்சி மன்ற அலுவலகத்தில், ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் 22 ஊராட்சி மன்றங்களுக்கு 35 எண்ணிக்கையிலான மின்கலன் மூலம் இயங்கும் வண்டிகள் வழங்கும் விழா தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா தலைமையில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.தி. சாருஸ்ரீ, மாவட்ட ஊராட்சித்தலைவர் கோ.பாலசுப்ரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில், தூய்மை பாரத இயக்கம் (ஊரகம்), செயலாக்கத்திட்டம் 2023-24ன் கீழ் திடக்கழிவு மேலாண்மையில் தன்னிறைவு பெறுவதற்காக கிராமப்புறங்களில் குப்பைகளை விரைந்து கொண்டு செல்ல ஏதுவாக மின்கலன் மூலம் இயங்கும் குப்பை வண்டிகள் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் ஒன்றியம், எடமேலையூர் நடுத்தெரு ஊராட்சியில் ஊரக வளர்ச்சித்துறையின் சார்பில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.12 லட்சத்து 70 ஆயிரம் மதிப்பீட்டில் புதியதாக கட்டப்பட்ட நியாய விலைக்கடையினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத்துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா திறந்து வைத்தார்.

அதனைத்தொடர்ந்து, செட்டிச்சத்திரம் சோனாப்பேட்டை பெரியார் நகர் பகுதியில், விளையாட்டு மைதானம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தினை தொழில் முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர்.டி.ஆர்.பி.ராஜா நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.தி.சாருஸ்ரீ, உடனிருந்தார்.

இந்நிகழ்வில், மன்னார்குடி வருவாய் கோட்டாட்சியர் யோகேஸ்வரன், நீடாமங்கலம் ஒன்றியக்குழு தலைவர் சோம.செந்தமிழ்செல்வன், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் திருமதி.விஜயலெட்சுமி, முத்துகுமரன் உள்ளிட்ட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

